# தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு (டிட்டோஜாக்)

21.02.2024

## செய்தி அறிக்கை

தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு - டிட்டோஜாக் பேரமைப்பின் மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் 20.02.2024 அன்று முற்பகல் 11 மணிக்கு சென்னை தலைமைச்செயலகத்தில் பள்ளிக்கல்வித்துறை கூட்ட அரங்கில் மதிப்புமிகு பள்ளிக்கல்வித்துறைச் செயலாளர் அவர்கள் தலைமையில், மதிப்புமிகு தொடக்கக்கல்வி இயக்குநர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற அரசாணை எண்:243 பள்ளிக்கல்வி (EE1(1)) துறை, நாள்: 21.12.2023 தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் அரசாணை எண்: 243 பள்ளிக்கல்வி (EE1(1)) துறை, நாள்: 21.12.2023ன் மூலம் தொடக்கக்கல்வித்துறையில் நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஊட்டுப்பதவிகளில் (Feeding Categories) மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றத்தால் தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள், தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிலிருந்து பட்டதாரி மற்றும் பட்டதாரி தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றோர், இடைநிலை ஆசிரியர்கள் ஆகியோர் உள்ளிட்ட 90 சதவீதத்திற்கும் மேற்பட்டோரின் பதவி உயர்வு வாய்ப்பு எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதை மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் விரிவாக எடுத்துரைத்தனர்.

கடந்த 29 ஆண்டுகளாக நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர் பதவிக்கான ஊட்டுப் பதவிகளாக தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர் மற்றும் பட்டதாரி தமிழாசிரியர் ஆகிய பதவிகள் வைக்கப்பட்டிருந்ததன் அடிப்படைக் காரணம், 6வது மற்றும் 7வது ஊதியக் குழுக்களில் அடிப்படை ஊதியம் வேறுபட்டாலும் ஊட்டுப் பதவிகளில் மாற்றம் செய்யப்படாத நிலை, அதற்கான காரணங்கள், அரசாணைகள் ஆகியவை குறித்தும் டிட்டோஜாக் மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், தொடக்கக்கல்வித்துறையில் 60 ஆண்டுகளாக ஒன்றிய முன்னுரிமை பின்பற்றப்பட்டதற்கான காரணங்கள் மற்றும் அதற்கான அவசியம், தேவை பற்றியும் மாநில முன்னுரிமை கொண்டு வருவதால் ஆசிரியர் நலன், மாணவர் நலன், கல்வி நலன் எவ்வாறு பாதிக்கப்படும் என்பதையும், மலைப்பகுதிகள் மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் உள்ள தொடக்க, நடுநிலைப் பள்ளிகள் எத்தகு பாதிப்பை எதிர்கொள்ளும் என்பதையும் மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் விரிவாக எடுத்துரைத்தனர்.

மாநில முன்னுரிமை கொண்டுவருவதால் பெரும்பாலான பெண்ணாசிரியர்கள் பதவி உயர்வில் செல்லும் வாய்ப்பை இழக்கும் சூழல் எவ்வாறு உருவாகிறது என்பதையும், நடுநிலைப் பள்ளிகளில் நேரடி நியமனம் பெற்ற பெண்ணாசிரியர்களும் மாநில முன்னுரிமையால் தங்கள் முன்னுரிமையை இழந்து பதவி உயர்வு வாய்ப்பை இழக்கும் சூழல் எவ்வாறு உருவாகிறது என்பதையும் விரிவாக எடுத்துரைத்து, அரசாணை 243ஐ ரத்து செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி விரிவான கோரிக்கை மனுவையும் சமர்ப்பித்தனர்.

டிட்டோஜாக் மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்களின் கருத்துக்களை மிகக்கவனமாகக் கேட்டறிந்த மதிப்புமிகு பள்ளிக்கல்வித்துறைச் செயலாளர் அவர்கள் இது தொடர்பாக கூடுதல் விவரங்களுடன் மீண்டும் ஒருமுறை விவாதிப்பதாகவும், இவ்விஷயத்தைச் சாதகமான முறையில் அணுகுவதாகவும் தெரிவித்தார். இவ்விஷயத்தில் அவரது அணுகுமுறை புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், கலந்தாலோசனைக் கூட்டத்தில் மதிப்புமிகு பள்ளிக்கல்வித்துறைச் செயலாளார் அவர்கள் தொடக்கக்கல்வித்துறையின் கீழ் இயங்கும் அரசுப் பள்ளிகளின் வளர்ச்சி குறித்தும், அரசுப் பள்ளிகளின் மாணவர்கள் எண்ணிக்கை உயர மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் குறித்தும், அதற்காக பள்ளிக்கல்வித்துறை, ஆசிரியர் சங்கங்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் எடுத்துக் கூறினார். தொடக்கக்கல்வியின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள பணிகள் மற்றும் மேற்கொள்ளவுள்ள பணிகள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினார்.

தொடக்கக்கல்வித்துறையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள அரசாணை எண்: 243 பள்ளிக்கல்வி (EE1(1)) துறை, நாள்: 21.12.2023 தொடர்பாக

**டிட்டோஜாக் பேரமைப்புடன் 90 நிமிடங்கள் கலந்தாலோசனை நடத்திய மதிப்புமிகு பள்ளிக்கல்வித்துறைச் செயலாளர் மற்றும் மதிப்புமிகு தொடக்கக்கல்வி இயக்குநர் ஆகியோருக்கு டிட்டோஜாக் பேரமைப்பு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.**

**இப்படிக்கு,**

**(ந.ரங்கராஜன்)**
**பொதுச்செயலாளர்**
**தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி**

**(செ.முத்துச்சாமி EX.MLC)**
**பொதுச்செயலாளர்**
**தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி**

**(அ.வின்சென்ட் பால்ராஜ்)**
**பொதுச்செயலாளர்**
**தமிழக ஆசிரியர் கூட்டணி**

**(ச.மயில்)**
**பொதுச்செயலாளர்**
**தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி**

**(இரா.தாஸ்)**
**பொதுச்செயலாளர்**
**தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி**

**(சி.சேகர்)**
**பொதுச்செயலாளர்**
**தமிழ்நாடு தொடக்க நடுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம்**

**(இல.தியோடர் ராபின்சன்)**
**பொதுச்செயலாளர்**
**தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்**

**(நா.சண்முகநாதன்)**
**பொதுச்செயலாளர்**
**தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்**

**(வி.எஸ்.முத்துராமசாமி)**
**பொதுச்செயலாளர்**
**தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி**

**(கோ.காமராஜ்)**
**பொதுச்செயலாளர்**
**தமிழக தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி**

**(சி.ஜெகநாதன்)**
**பொதுச்செயலாளர்**
**JSR தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி**

**(டி.ஆர்.ஜான் வெஸ்லி)**
**பொதுச்செயலாளர்**
**தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் சங்கம்**